1975 நவம்பர் 6]

திரு. செ. முத்துசாமி : கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்க அரசு ஆணை இருக்கிறது. இந்த ஆணைக்குக் கட்டுப்படாமல் கட்டணம் வசூலிக்கக் கூடிய கல்லூரிகள்மீது அவசரச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அரசு முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவசரச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது. அதற்காக தனியாக ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அரசாங்கத்தினுடைய சட்டப்படி, புகுமுக வகுப்புகளுக்குக் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் சில கல்லூரிகளில் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். கட்டணம் இல்லாத கல்லூரிகள் இருக்கும்பொழுது, இந்தக் கல்லூரிகளில் கட்டணம் கொடுத்து மாணவர்கள் சேருவதற்குக் காரணம் என்ன? அங்கு மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கு சேருகிற மாணவர்களையும், சேர்க்கிற பெற்றோர்களையும்தான் கேட்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, இந்த ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே, அவர்கள் கட்டணம் வசூலித்தார்கள். அந்தப் பணத்தை அவர்கள் திருப்பித் தரவில்லை. அரசாங்கமே அந்த வருஷத்தில் மாணவிகளிடம் அந்தக் கல்லூரி வசூலித்த கட்டணத்தைத் திருப்பித் தந்தது. அதிலும் சில மாணவிகள் வாங்கிக் கொள்ளவில்லை. அதன்பின், பத்திரிகை மூலமாக அறிக்கை விட்டோம். அந்தக் கல்லூரியில் கட்டணம் வசூலிப்பதற்கு அரசாங்கம் பொறுப்பில்லை என்று அறிக்கை கொடுத்தோம். ஆனாலும் இப்போது மாணவிகள் அந்தக் கல்லூரியில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

Teachers of Raja's College of Sanskrit and Tamil Studies, Tiruvaiyaru.

* 74. Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the revised scales of pay made applicable to the teachers of Oriental Colleges, are not made applicable to the teachers of Raja's College of Sanskrit and Tamil Studies at Tiruvaiyaru in Thanjavur district; and

(*b*) if so, the reason therefor?

[1975 நவம்பர் 6

திருவையாறு, ராஜா சமஸ்கிருத தமிழ்மொழிப் பாட கல்லூரி ஆசிரியர்கள்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கீழ்த்திசை மொழிக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் திருத்தியமைக்கப்பட்ட சம்பள வீதங்கள் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறி லுள்ள ராஜா சமஸ்கிருத, தமிழ்மொழிப் பாட கல்லூரி ஆசிரியர்களுக்குப் பொருந்தாதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ராஜா கிழ்த்திசைக் கல்லூரி, அரசு மானியம் பெறும் கல்லூரி அல்ல. ஆகையால் மானியம் பெறும் கீழ்த்திசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அமுலில் உள்ள ஊதிய விகிதங்கள் ராஜா இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லே.

திரு. கே. எஸ். கணபதி: மற்ற கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் தகுதியை இந்த கீழ்த்திசைக் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெற் றிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி, மற்ற கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம்போல் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கீழ்த்திசைக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே, மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் ஒரு குழு அமைத்து, அது அதைப் பார்த்துக்கொண்டு வருகிறது. அரசினுடைய மானியம் எதுவும் பெறவில்லை. அந்தக் கல்லூரிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் மற்ற கல்லூரிகளில் போல் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர், "போதுமான அளவுக்குப் பணம் இல்லாத காரணமாக, ஊதியம் குறைவாகக் கொடுத்து வருகிறோம்; மற்ற கீழ்த்திசை கல்லூரிகள்போன்று இதற்கும் அரசாங்கம் மானியம் தரவேண்டும்" என்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதுபற்றி பரிசீலனை செய்து ஒரு முடி வெடுக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி: அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் படும் ஊதிய வேறுபாட்டை மாத்திரம் அரசு ஒப்புக்கொண்டு, தானே கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு ஈடாக சம்பளம் அளிக்க பணமில்லே. அரசாங்கம்தான் தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலேவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்து தக்க முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தக் கல்லூரியிலே பணியாற்றும் ஆசிரியர் களுக்கு முறையான சம்பளம் கொடுக்கப்படவில்லே, குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லே. அது மாவட்ட ஆட்சித் தலேவர் மூலமாக கவனிக்கப்பட வேண்டும்.

Government Arts College for Women, Kumbakonam

* 75. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a sum of Rs. 1 lakh was donated to the Government a few years back by the Rotary Club of Kumbakonam for the construction of an Auditorium at the Government Arts College for Women, Kumbakonam;

(b) if so, whether the work relating to construction has been taken up; and

(c) if not, the reason for the delay?

கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் அரங்கம் (Auditorium) ஒன்று கட்டுவதற்காக, கும்பகோணம் ரோட்டரி கிளப் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு லட்சம் ரூபாயை அரசுக்கு நன்கொடையாக வழங்கியது உண்மையா ?

(இ) ஆமெனில், கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(உ) இல்லேயெனில், தாமதத்திற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லே.